# இலங்கை-இந்திய பொருளாதார ஒத்துழைப்பு

Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண். 49
போன் 389
National Tamil Daily
மலர் 9
இதழ் 213
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க ஆவணி 27 ஜ. அவ். 7 செவ்வாய்க்கிழமை [12-9-67]

## இந்திரா - டட்லி ஆலோசிப்பர்

கொழும்பு, திங்கள் இம்மாதம் 18-ம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்யும் பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியும் பிரதமர் டட்லி சேனநாயகாவும் இரு நாடுகளின் பொருளாதார அபிவிருத்தி, தேயிலை ஏற்றுமதியில் கூட்டு முயற்சி இலங்கை-இந்திய ஒப்பந்த அமுல் ஆகியவை சம்பந்தமாக பேச்சுவார்த்தை நடத்துவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

19-ம் திகதி பாரதப் பிரதமர் திருமதி இந்திராவும் பிரதமர் திரு. டட்லியும் நடத்தும் பேச்சுவார்த்தையின்போது ராஜாங்க மந்திரி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன, பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் நிரந்தரக்காரியதரிசி திரு. ஜி. வி. பி. சமரசிங்கா, திரு பொன் சேகா ஆகியோரும் இலங்

(2-ம் பக்கம் பார்க்க)

# மார்ட்டின் கமிஷன் சிபார்சு வெளியிட கோரிக்கை

## மந்திரிக்கு மக்கள் மகஜர்

யாழ்ப்பாணம், செவ்வாய் யாழ்ப்பாணம் மாநகர சபைக்குப் புதிய தேர்தல் நடைபெறுவதற்கு முன்னர் வட்டார விஸ்தரிப்பு சம்பந்தமாக மார்ட்டின் கமிஷன் தெரிவித்த சிபார்சுகளைக் கொண்ட அறிக்கையை வெளியிட வேண்டுமென்ற கோரிக்கை யாழ்ப்பாண நகரமக்கள் மத்தியில் வலுப்பெற்று வருகிறது.

மார்ட்டின் கமிஷனின் சிபார்சுகளை அமுல் நடத்தினாலும் சரி அமுல் நடத்தாவிட்டாலும் சரி முதலில் அந்த அறிக்கையை பொதுமக்கள் தெரிந்து கொள்ளும் பொருட்டு வெளியிட வேண்டுமென்று வாக்காளர் பலரும் நல்லூர் எம். பி. டாக்டர் ஈ. மு. வி. நாகநாதனும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்டுள்ளதாகத் தெரிகிறது.

மார்ட்டின் கமிஷன் செய்துள்ள சிபார்சின்படி இப்போது 17 வட்டாரங்களாக இருக்கும் யாழ்ப்பாண மாநகரசபை 25 வட்டாரங்களாக விஸ்தரிக்கப்படவேண்டுமென்றும் ஒவ்வொரு வட்டாரங்களும் இரண்டாயிரம் வாக்காளர்களைக் கொண்டதாக இருக்கக் கூடியதாகவும் சிபார்சு செய்யப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

அந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டால் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு மூன்று ஸ்தானங்கள் மாநகரசபையில் கிடைக்குமென்றும் தெரிய வருகிறது.

## மயிலிட்டி மீன்பிடித் துறை

யாழ்ப்பாணம், செவ். மயிலிட்டியில் மீன்பிடித் தொழிலை அபிவிருத்திசெய்வதற்கான திட்டத்திற்கமைய புதிய மீன்பிடித் துறைமுகம் ஒன்று விரைவில் அமைக்கப்படவிருக்கின்றது. இத்துறைமுகத்தை கடற்றொழில் கூட்டுஸ்தாபனத்தின் உதவியுடன் மீன்பிடி அமைச்சு அமைக்கவிருக்கிறது.

மயிலிட்டிப் பகுதி மீன்பிடித் தொழிலாளர்களின் பிரச்னைகளை நிவிர்த்திசெய்

[2-ம் பக்கம் பார்க்க]

## காயமடைந்தவர் இறந்துவிட்டார்

### ஆஸ்பத்திரியில் சேர்த்த 'பாதுகாவலர்' எங்கே?

யாழ்ப்பாணம், செவ். மரத்திலிருந்து விழுந்து காயமடைந்ததாக மீசாலை தெற்கிலிருந்து ஒருவரை யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அவரது பாதுகாவலன் என்று சொல்லிக்கொண்டு வேறொருவர் அனுமதித்துச் சென்றாராம். அனுமதிக்கப்பட்டவர் இறந்து நான்கு தினங்களாகியும் அந்தப் பாதுகாவலரை இன்னும் கண்டுபிடிக்க முடியவில்லையாம்.

மாமரத்திலிருந்து தவறி விழுந்ததாகக் கூறப்படும் 47 வயதான செல்லத்துரையின் சடலம் இன்றும் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி சவச்சாலையிலேயே இருக்கிறது.

செல்லத்துரையின் மரணம் பற்றி யாழ்ப்பாண நகர மரண விசாரணை அதிகாரி திரு. நா. இராசநாயகம் விசாரணை நடத்தினார், இந்த விசாரணையின் போதுதான் செல்லத்துரையை மீசாலை தெற்கைச் சேர்ந்த மார்க்கண்டு என்பவர் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவந்ததாகவும் அவர் தம்மைச் செல்லத்துரையின் பாதுகாவலர் எனக் கூறியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

செல்லத்துரை சென்ற 9-ம் திகதி பிற்பகல் 3 மணிக்கு இறந்துவிட்டார். அவரதுபாதுகாவலன் மார்க்கண்டுவுக்குத் தகவல் தெரி

[6-ம் பக்கம் பார்க்க]

## இந்திய—சீன எல்லையில் மீண்டும் மோதல்

புதுடில்லி, செப். 11 நேற்றுக்காலை, சிக்கிம் எல்லையில் சீனத்துருப்புகள் இந்தியத் துருப்புகள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தன. சில இந்திய ஜவான்கள் இத்துப்பாக்கிச்சூட்டில் காயமுற்றனர்.

முதலில் துப்பாக்கியும், இயந்திரத் துப்பாக்கியும் பாவித்த சீனத் துருப்புகள். பின்னர் பீரங்கிகளையும் பயன்படுத்தினர். அவர்களின் தாக்குதல் விட்டுவிட்டுத் தொடர்ந்து நடைபெற்றது.

கடந்த வியாழக்கிழமையன்று, சுமார் 60 சீனச் சிப்பாய்கள் சிக்கிம் எல்லைக்குள் வந்து, பின் திரும்பிச்சென்றனர். அந்தச் சம்பவத்துக்குப் பிறகு, சனியும், ஞாயிறும் சில சீனர் மீண்டும சிக்கிம் எல்லைக்குள் புகுந்தனர். ஆனல் இந்தியத் துருப்பினரின் எச்சரிக்கையை அடுத்து வாபஸ் பெற்றனர்.

இச்சம்பவங்களைத் தொடர்ந்து, நேற்று இத்துப்பாக்கிப் பிரயோகத்தில் சீனத் துருப்புகள் ஈடுபட்டிருக்கின்றன.

## புதிய கல்வித் திட்டத்துக்கு வடபகுதியின் திருத்தம்

யாழ்ப்பாணம், செவ்வாய் "கல்வி அமைச்சின் புதிய கல்விப் புனரமைப்புத் திட்டத்தின்படி பாடசாலைகள் இரண்டுதரமாகப் பிரிக்கப் படவிருக்கின்றன. முதலாம் வகுப்பிலிருந்து ஏழாம் வகுப்புவரையுள்ள வகுப்புக்கள் கனிஷ்ட பிரிவுக்குள்ளும் ஏழாம்வகுப்பிலிருந்து ஜீ. ஸீ. ஈ. [உயர்தரம்] வரையுள்ள வகுப்புக்கள் சிரேஷ்ட பிரிவுக்குள்ளும் அடங்கும். இத் திட்டத்தின்படி ஒவ்வோர் பிரிவுக்கும் தனித்தனியாக ஒவ்வொரு அதிபர்கள் நியமிக்கப்படவிருக்கிறார்கள். இந்தமுறை கல்வி அமைப்பை மிகவும் பாதிப்பதாகவிருக்கின்றது. ஒவ்வொரு சிரேஷ்ட பாடசாலை அதிபரின் மேற்பார்வையின் கீழும் கனிஷ்ட பாடசாலை அதிபரின் உதிவியுடன் அது இயங்கவேண்டுமென்றதிருத்தத்தை கல்விப் புனரமைப்புத் திட்டத்தில் சேர்க்குமாறு வலியுறுத்தவேண்டுமென்ற தீர்மானம் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் கல்விக் கந்தோரில் நடைபெற்ற கல்வி புனரமைப்புத் திட்ட ஆலோசனைக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

வடபகுதி மத்தியாதிபதி திருமதி ஆர். ஆர். நவரத்தினம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் வடபகுதி தமிழரசுக்கட்சி எம். பி. க்களான திருவாளர்கள் எஸ். ஜே. வி. செல்வநாயகம், வி. நவரத்தினம், எஸ். கதிரவேற்பிள்ளை கே. துரைரத்தினம், கா. பொ. இரத்தினம், வி. தர்மலிங்கம், ஈ. எம். வி. நாகநாதன் ஏ. அமிர்தலிங்கம் ஆகிவோர் உட்பட வடபகுதி கல்வி ஆலோசகர் திரு. ஞானசேகரமும். மாவட்ட கல்வி அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

சிரேஷ்ட பாடசாலை அதிபரின் மேற்பார்வையில் கனிஷ்டபாடசாலைகளை அமைக்க வேண்டுமென்ற தீர்மானம் சகல பாராளுமன்ற உறுப்பினர்களாலும் ஏகமனதாக இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. இத்திருத்தம் விரைவில் கல்வி அமைச்சருக்கு அனுப்பிவைக்கப்படுமெனவும் இங்கு தெரிவிக்கப்பட்டது.

புதிய கல்விப் புனரமைப்புத்திட்டம் முக்கியமாக வடபகுதிக் கல்வித்தரத்தை மிகவும் பாதிக்கக்கூடியதாகவிருக்கிறதென்றும் இத்திட்டம் சிலவிஷமிகளால் வேண்டுமென்றே தேசிய ஐக்கியத்தைக் குலைக்கவும், எமதுகல்வித்தரத்தை சிதறடிக்கவும் சேர்க்கப்பட்டதென்றும் இங்கு ஏற்கனவே அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது.

புதிய கல்விப் புனரமைப்புத்திட்டம்பற்றி ஊர்காவற்றுறை எம். பி. திரு. வி. நவரத்தினம் தனது அபிப்பிராயத்தைத் தெரிவிக்கையில் குறிப்பிட்டதாவது:—

முதலாம்வகுப்பிலிருந்து ஏழாம் வகுப்பு வரையிலுள்ள வகுப்புகள் கனிஷ்டபாடசாலைகளின் தரத்

[6-ம் பக்கம் பார்க்க]

## படுக்கை அறையில் கணவன் கொலை

### மனைவி கைது; அநுராதபுரத்தில் சம்பவம்

அனுராதபுரம், திங்கள் தேநீர்க்கடை யொன்றின் சொந்தக்காரரானடி. சுமணவீரா என்பவர் தமது வீட்டிலுள்ள படுக்கையறையில் கொலை செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இதுசம்பந்தமாக இவரது மனைவியை பொலிசார் கைது செய்துள்ளனர்.

அனுராதபுரம் புதிய நகரிலுள்ள தேநீர்க்கடைக்குச் சொந்தக்காரரும் இரு குழந்தைகளின் தந்தையுமான சுமணவீரா இரவு நித்திரை செய்துகொண்டிருந்தபோதே கொலை செய்யப்பட்டிருக்கலாமெனச் சந்தேகிக்கப்படுகிறது

பொலிசார் ஸ்தலத்துக்குச் சென்று பார்த்தபோது இவர் கழுத்து வெட்டப்பட்ட நிலையில் இரத்த வெள்ளத்தில் கிடந்ததாக அறியப்படுகிறது.

இதுசம்பந்தமாக அனுராதபுரம் பொலிசார் தீவிர புலன் விசாரணை நடத்தி வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

என் பொது வாழ்வில் பழிக்குப்பழி வாங்கும் சக்தி பன்முறை எனக்குக் கிடைத்திருந்தும் நான் அவ்விதம் செய்யவில்லை; அவ்விதம் செய்யக்கூடாதென்று நண்பர்களுக்கும் உபதேசம் செய்தேன். இந்தக் கொள்கையைப் பரப்புவதற்காகவே என் வாழ்க்கை அர்ப்பணம் செய்யப்பட்டிருந்தது.

—மகாத்மா காந்தி

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்கஹு ஆவணி ௴ 27 உ (12-9-67)

## அறிக்கையாவது வெளிவரட்டும்

கலைக்கப்பட்ட யாழ்ப்பாணம் மாநகரசபைக்கு புதிய தேர்தல் நான்கு மாதங்களில் நடைபெறுமென உள்ளூராட்சி அமைச்சர் அறிவித்ததைத் தொடர்ந்து புதிய தேர்தலுக்கான முயற்சியும் அபேட்சகர்களை நிறுத்துவதற்கான முஸ்திபுகளும் நடைபெற்றுவருகின்றன. இதே சமயம் வட்டார விஸ்தரிப்பு யோசனை என்னுயிற்று? வட்டாரங்களைப்பிரிப்பது சம்பந்தமாக விசாரணை நடத்தி மார்ட்டின் கமிஷன் கூறிய சிபார்சுகளின் முடிவு என்ன? மார்ட்டின் கமிஷன் அறிக்கையை அமுல் செய்த பின்னர் தேர்தல் நடத்தினுல் என்ன? தேர்தல் முடிந்தபின் அந்த அறிக்கையை அமுல் நடத்தினுலும் பரவாயில்லை. இப்படி வாதப்பிரதிவாதங்கள் தொடங்கியுள்ளன.

பதினைந்து வட்டாரங்களாக இருந்த யாழ்ப்பாணம் மாநகரசபை அவசர அவசரமாகப் பதினேழு வட்டாரங்களாக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து வட்டாரங்கள் சரியாகப் பிரிக்கப்படவில்லையென்றும், வாக்காளர் தொகையை அடிப்படையாகக் கொண்டு வட்டாரங்கள் விஸ்தரிக்கப்படவேண்டுமென்றும் கோரிக்கைகள் எழுந்தன. சில வட்டாரங்களில் வாக்காளர் தொகை மிக மிக அதிகமாகவும் சில வட்டாரங்களில் வாக்காளர் தொகை மிக மிகக் குறைவாகவும் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது இது உண்மையும்கூட. இதே சமயம் ஜாதி அடிப்படையிலும் வட்டாரங்கள் பிரிக்கப்படவேண்டுமெனவும் யோசனை கூறப்பட்டது. சரிசமமாக வட்டாரங்கள் பிரிக்கப்படவேண்டுமென்றும் அப்போதுதான் குறிப்பாக வட்டாரங்களின் நலன்களையும் பொதுவாக நகரின் முன்னேற்றத்தையும் கவனிக்க முடியுமெனவும் தெரிவிக்கப்பட்டது. இது நியாயமான யோசனையும்கூட. இக்கோரிக்கைகளையும் யோசனைகளையும் ஏற்று வட்டார விஸ்திரிப்புப் பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க மார்ட்டின் கமிஷன் நியமிக்கப்பட்டது.

இந்தக் கமிஷனின் அறிக்கை பற்றியல்லாது கமிஷன் பற்றியே இப்போது வாதப்பிரதிவாதங்கள் நடைபெறுகின்றன. கமிஷன் அறிக்கை என்ன என்பதும் அதில் கூறப்பட்டுள்ள சிபார்சுகள் பற்றியும் யாழ்பாணப் பொதுமக்களுக்கோ வாக்காளருக்கோ எதுவும் தெரியாது. பணத்தைச் செலவிட்டு கமிஷன்களை நியமித்தால் போதாது. கமிஷனின் அறிக்கைகளையும் சிபார்சுகளையும் அமுல் நடத்தினுலும் அமுல் நடத்தாவிட்டாலும் கமிஷன் என்னதான் செய்தது என்பதையாவது பொதுமக்கள் அறிந்தால் என்ன? எனவே மார்ட்டின் கமிஷன் அறிக்கை என்ன என்பதைப் பொதுமக்கள் தெரிந்துகொள்வதற்காக அதை முதலில் உள்ளூராட்சி அமைச்சு வெளியிடட்டும்.

# அரியாலை, திருநெல்வேலி விவசாயிகளுக்குப் பாராட்டு

## நெல் விளைச்சலிலும் உபஉணவு உற்பத்தியிலும் முதலிடம்

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் விவசாயத்திலும் கமத்தொழிலிலும் திருநெல்வேலியும், அரியாலையுமே முதலிடம் வகிப்பதாக யாழ்ப்பாணம் காரியாதிகாரி அலுவலகத்தில் நடைபெற்ற விவசாய உற்பத்திக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஜே. எம். சபாரத்தினம் இக்கூட்டத்துக்குத் தலைமை வகித்தார். யாழ் மாவட்டத்திலுள்ள 12 சேவையாளர்கள் பிரிவிலும் நெற்பயிர்ச் செய்கையில் அரியாலையும், உப உணவு உற்பத்தியில் திருநெல்வேலியும் முதலிடம் வகிப்பதாகவும் இங்கு தெரிவிக்கப்பட்டதோடு, இப்பகுதி விவசாயிகளுக்கு பாராட்டும் தெரிவிக்கப்பட்டது.

திருநெல்வேலியில் மேலும் உப உணவு உற்பத்தியைப் பெருக்க, அங்கு ஒரு போஷாக்கு உணவு உற்பத்தித்திட்டம் அமைக்கப்பட்டுள்ளது பற்றியும் ஆராயப்பட்டது. இத்திட்டம் இலங்கையில் 5 இடங்களில் மாத்திரம் நிறுவப்பட்டுள்ளபோதிலும், திருநெல்வேலியிலேயே மிகவும் முக்கியத்துவம்பெற்றிருப்பதாக கமத்தொழில், விவசாய புள்ளிவிபரங்களிலிருந்து தெரியவந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. திருநெல்வேலி பண்ணையிலிருந்து இதுவரை 1000 படித்தபெண்களும், வாலிபர்களும், கோழி வளர்ப்பு, மாடு வளர்ப்பு, வீட்டுத் தோட்டம், உப உணவு உற்பத்தி ஆகியவற்றில் இதுவரை இத்திட்டத்தின் கீழ் விசேஷ பயிற்சி பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அரியாலை, திருநெல்வேலி பலநோக்கக் கூட்டுறவுச்சங்கங்கள் மூலம் இப்பகுதி விவசாயிகளுக்கு மண்வெட்டி, உரம், விதைநெல், உப உணவுப்பொருள்விதைகள், கன்றுகள் ஆகியன வழங்குவது பற்றியும் ஆராயப்பட்டது. புதிய விவசாயக்கடனை இப்பகுதி மக்களுக்கு முதலில் வழங்குவது பற்றியும் இங்கு ஆலோசனை செய்யப்பட்டதாகத் தெரிகின்றது. [ந. நி.]

## இன்றைய பலன்

12-9-67
செவ்வாய்க்கிழமை
(ஆவணி மாதம் 27உ)

நட்சத்திரம்- மூலம் இரவு 10-35 வரை மேல் பூராடம்.

திதி-நவமி இரவு 10-52 வரை மேல் தசமி.

சுபநேரம்- 10-34—12-04.

ராகுகாலம்- 3-04—4-34.

மேஷம்- மனத்திடம், மணியானவாழ்வு.

ரிஷபம்- இனப்பகை, இருண்ட மனம்.

மிதுனம்- வீட்டில் அமைதி, புதியவிருந்தினர்.

கடகம்-பகைவர் உறவு, பண நஷ்டம்.

சிம்மம்- நல்வழிநாடல், நகைச்சுவை,

கன்னி- தொழில் நலன், தொடர்புகள் பெருகும்.

துலாம்- பொருள்வரவு, புத்துணர்ச்சி.

விருச்சிகம்-சினம்சீறும், சிந்தனை முடக்கம்.

தனுசு- சீரணக்குறைவு, சிக்கல் தோன்றும்.

மகரம்- மேம்பட உரைத்தல், மேலிடத்து ஆதரவு.

கும்பம்- அவசர முடிவு, அனுகூலத்தடை.

மீனம்- நம்பிக்கை வளரும், நலன்கள் சேரும்.

—சோதிடக் கலாநிதி—
திருமலை வேலுப்பிள்ளை

## தேவாலய புனருத்தாரணம்

சங்கானை, திங்கள்

பல ஆண்டுகளாகச் சீர் அழிந்த நிலையில் இருந்த சங்கானை சலேசியார் தேவாலய புனருத்தாரண வேலைகள் பூர்த்தியடைந்து வருகின்றன. இம்மாதம் 7-ம் திகதி இங்கு அர்ச். பிரான்சிஸ் சலேசியார் திருநாள் ஆரம்பமாகி நேற்று பாடற்பூசையும் கூடுசுற்றலுடன் முடிவடைந்தது.

9-ம் திகதி மகாவந்தனத்திற்குரிய மேற்றிராணி ஆண்டவர் எமிலியானுஸ்பிள்ளையால் சிறுர்களுக்கு திவ்விய நன்மையும் உறுதி பூசுதலும் கொடுக்கப்பட்டது.

## மயிலிட்டி...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

யும் முகமாக, இங்கு ஒரு மீன்பிடித்துறைமுகம் அமைத்துத் தரும்படி வடபகுதி ம் பி.க்கள் வேண்டியதற்கிணங்க அமைத்துத்தருவதாக அமைச்சர் ஏற்கனவே வாக்குறுதியளித்திருந்தார். அதற்கான கட்டட வேலைகள் அக்டோபர் மாதம் பிற்பகுதியில் ஆரம்பமாகுமென அறிவிக்கப்பட்டுள்ளது. இக்கட்டடம் கட்ட 3 லட்சம் ரூபா செலவாகுமெனவும் ஒருவருடகாலத்துக்குள் இக்கட்டட வேலைகள் பூர்த்தியாகுமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. [ந. நி.]

## இலங்கை-இந்திய ...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கையிலுள்ள இந்திய ஹைகமிஷனர் திரு. வை. டி. கண்டேவியாவும்கலந்துகொள்ளவிருக்கிறுர்கள்.

எகிப்துடன் பருத்தி, தேயிலை பண்டமாற்று வர்த்தகம் சம்பந்தமாகவும் இப்பேச்சுவார்த்தையின் போது ஆலோசிக்கப்படவிருக்கிறது.

உலகச் சந்தையில் தேயிலையின் விலையை நிலைப்படுத்துவது பற்றியும் தேயிலை ஏற்றுமதியில் இரு நாடுகளும் கூட்டாக இயங்குவதற்கான வழிபற்றியும் இரு பிரதமர்களும் ஆராயவிருக்கிறுர்கள்.

இலங்கை-இந்திய ஒப்பந்த அமுல் சம்பந்தமாக ஆராயும்பொழுது நாடற்றவர் பிரச்னைபற்றியும் தெளிவாக ஆராயப்படும் எனத்தெரியவருகிறது

21-ம் திகதி இரண்டாவது சுற்றுப்பேச்சு நடைபெறுமெனவும் அதன் இறுதியில் இரு பிரதமர்களின் கூட்டறிக்கையொன்று வெளியிடப்படுமெனவும் அறியப்படுகிறது.

ஆசிரியருக்கு கடிதம்

## நல்லூரில் நன்னடத்தை

திருப்பதி கோயிலில் 17 பேர் நசுங்கிச் செத்ததை நினைக்க துக்கமாயிருக்கிறது. சமீபத்தில் நல்லூர் முதலாம் திருவிழாவில் சில பெண்களும் குழந்தைகளும் மூர்ச்சைபோட்டு விழுந்துவிட்டார்கள். மடுக்கோயிலில் சுமார் 2 லட்சம் பேர் கூடியிருந்தும் இத்தகைய சம்பவங்கள் நிகழாதது ஓர் ஆறுதல்.

நல்லூர் கோயிலில் சனநெருக்கடி அதிகமாகி வருகிறது. கன்னிப் பெண்கள் கோயிலுக்கு வருவதே காரணம். முந்திய காலத்தில் அப்படியல்ல. சில பெண்கள் துணையில்லாமலும் பொறப்பற்ற வேறு பெண்களோடும் வருவது நிலைமையை மோசமாக்கிறது. இவர்கள் கோயில் வழிபாட்டைத்தவிர வேறு எண்ணங்களை தலையில் வைத்துக்கொண்டு வீதியில் உலாத்துவார்கள். இவர்களுக்குப் பின்னுல் ஷேர்ட் போடாமல் கோயிலுக்குவர வெட்கப்படும் வாலிபர்களும் இராத் திருவிழாக்களில் மேலும் கீழும் நடந்து திரிவார்கள்.

வேறு சில வாலிபர்கள் அரைக்கால் சட்டையும் காலணியும் போட்டுக் கொண்டு பெண்கள் மீது அசிங்கமான வார்த்தைகளைப் பிரயோகித்துக் கொண்டுதிரிவார்கள். வேறு சமய வாலிபர்கள் இவ்வாறு நடந்துகொள்வது நியாயமற்றது. இவர்கள் கோயிலை ஒரு காணிவலாக்கி வழிபாட்டிடத்தின் [illegible] கள்.

சைவபரிபாலன சபையின் சிரேஷ்ட அங்கத்தவர்களில் ஒருவர் வெள்ளை உடுத்து கறுத்த சப்பாத்து போட்டுக்கொண்டு உலவுவதைப் பார்க்க இன்னும் வருத்தமாயிருக்கிறது.

இப்பெரியார் அங்கே என்ன செய்கிறுர் என்பது விளங்கவில்லை. திருவிழாக் காலங்களில் மாவட்ட அதிபரும் மனைவியும் தங்கள் இந்துக்களல்லாத நண்பர்களுடன் சர்வாதிகாரிபோல சாப்பாத்துக்காலுடன் சுவாமிக்கு அருகில் செல்வதும் இன்னெரு காட்சி. சப்பாத்துடன் இந்த 26 நாட்களும் கோயில் வீதிகளில் நடப்பவர்கள் இந்துக்களின் மனதைப் புண்படுத்துவார்கள்.

மற்றவர்களை மதிக்காமல் பூஜைநேரத்தில் நெருக்கியடித்துக்கொண்டு முன் செல்பவர்களையும் குறிப்பிடவேண்டும். இவர்களுக்குத்தான் அங்கே உரிமை உண்டு என்று இவர்கள் நினைக்கிறுர்கள்.

வழிபாட்டுக்கு அமைதி வேண்டும். ஆனுல் நல்லூரில் இடியும் சண்டையும்தான் இருக்கிறது.

முழங்காலுக்கு மேல் சட்டை போட்டுக்கொண்டும் சிறு பெண்கள் கோயிலுக்கு வருகிறுர்கள். இதையிட்டு இவர்களுடைய பெற்றேர் வெட்கப்படவேண்டும்.

சனங்கள் இந்து ஆசாரப்படி நடந்துகொள்ளும் முறைகளை கோயில் அதிகாரிகளும் இந்து தலைவர்களும்இயற்றுவார்களென்று நம்புகிறேன்.

டாக்டர்
கே. கனகரத்தினம்.
யாழ்ப்பாணம்.

## ஐயாறன் எழுதுவது

சற்றும் எதிர்பாராதவிதமாகச் சென்னையிலே ஒரு முக்கிய கூட்டத்தில் இலங்கைக்குப் பாராட்டும் புகழுரையும் கிடைத்ததைக் கேட்க மிக மகிழ்ச்சியாக இருந்தது.

தெய்வீகப்பேரவை என்ற ஸ்தாபனத்தின் ஆதரவில் சமயப்பிரசாரகர் பயிற்சி வகுப்பு, மைலாப்பூர் கபாலீச்வரர் கல்யாண மண்டபத்தில் நடைபெற்றது. பூர்த்தி விழாவுக்கு மதுரை ஆதீன கர்த்தர் தலைமை வகித்தார். வித்வான் ஆறுமுகநாவலர், ஸ்ரீ சச்சிதானந்தம்பிள்ளை, மதுரை ஆதீன கர்த்தர், திருவாசகமணி கே. எம் பாலசுப்பிரமணியம் முதலிய பலர் பேசினர். இப்பயிற்சி வகுப்பில் ஆண்களும் பெண்களுமாந் சுமார் 30 மாணவர்களிருந்தனர்.

தமிழகத்திலுள்ள பல சைவ ஆதீனகர்த்தர்கள் இதில் சேர்ந்துள்ளனர். வைணவ பீடாதிபதி யாரும் இன்னும் சேரவில்லையாம். தமிழகத்திலுள்ள கோவில்களின் வருமானத்தில் 100க்கு 5 விகிதமும், மடங்களின் வருமானத்தில் ஒரு பகுதியும் வசூலித்து, அந்த தொகையைக் கொண்டு சமயசம்பந்தமான பணிகளை ஆற்றவேண்டுமென்பது இச்சபையின் நோக்கம். இரண்டாவது வருடத்துக்கும் தர்மபுரம் ஆதீனகர்த்தரே இப்பேரவைக்குத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

சமயப்பிரசார வகுப்பில் பயிற்சிபெற்று தேறியவர்களுக்கு மாதம் 200 ரூபாய் வீதம் சம்பளம் கொடுக்க ஏற்பாடாகியுள்ளது. பயிற்சி வகுப்பு பூர்த்தி விழாவில், பேரவையின் உபதலைவரும், இந்து அறநிலைய கமிஷனருமான சாரங்கபாணி முதலியார் அவர்கள் பேசும் போதுதான் இலங்கையைப் பாராட்டினுர். இரு மாதங்களுக்கு முன் தர்மபுரம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தம்பிரான் அவர்கள் யாழ்ப்பாணம்வந்து திரும்பியபோது இங்குள்ள இந்து சமயபாட புத்தகங்களில் சிலவற்றைக் கொண்டு சென்று, இங்கு கல்வி ஸ்தாபனங்களில் சமயத்தை ஒரு முக்கிய பாடமாக வைத்துள்ளதைப்பற்றிய விவரங்களை கமிஷனரவர்களிடம் விளக்கினுராம். சமயச் சார்பற்ற (செக்யூலர்) இந்தியாவில், பள்ளிக்கூடங்களில் சமயக் கல்வி போதனை அடியோடு கிடையாது. இலங்கை ஒவ்வொரு மாணவருக்கும் அவரது சமயத்தைப் போதிக்கச் செய்துள்ள ஏற்பாட்டையும், சமயபாட புத்தகங்கள் நல்ல முறையில் பிரசுரமாகியுள்ளதையும், மாணவர்களுக்கு சமய அறிவைப் புகட்டுவதையும் கமிஷனர் பாராட்டினுர். இலங்கையில் பிரசுரமாகியுள்ள இந்து சமயபாட புத்தகத்தைக் கையில் வைத்துக்கொண்டு அதிலுள்ள விஷயங்களைப் பாராட்டியதுடன், இதே போன்ற நூலை இந்தியாவிலும் வெளியிட்டு, மாணவர்களுக்கு சமய அறிவூட்டவேண்டுமென்றுர். இந்த யோசனை அங்கு எப்போது அமுலுக்கு வருமோ தெரியவில்லை. என்றுலும் இலங்கையைப்பற்றி அவர் பகிரங்கமாகப் பாராட்டியது எனக்கு எவ்வளவு பெருமையாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தது தெரியுமா? கூட்டம் முடிந்ததும் கமிஷனரிடம் பேசுகையில், இது பற்றிய விவரங்களைத் தெரிவித்ததுடன் கொழும்பு விவே

[6-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென் ஆபிரிக்காவுடன் ராஜிய உறவுகள்

## மாலாவி முடிவு

மாலாவி, செப். 11

தென் ஆபிரிக்காவுடன் ராஜ்ய தொடர்புகள் வைத்துக்கொள்வதென மாலாவி முடிவுசெய்துள்ளது.

புதிதாகச் சுதந்திரமடைந்த ஆபிரிக்க நாடுகளில் ஒன்ருன மாலாவிதான், தென் ஆபிரிக்காவுடனே ராஜ்ய உறவுகள் வைத்துக் கொள்ளும் முதலாவது வெள்ளையரற்ற நாடாகும்.

தென்ஆபிரிக்காவில் மாலாவியின் முதலாவது பிரதிநிதியாக ஒரு ஐரோப்பியர் கடமையாற்றுவாரென்றும் ஆனல் விரைவில் அவருடைய இடத்துக்கு ஒரு ஆபிரிக்கர் நியமிக்கப்படுவாரென்றும் மாலாவி அறிவித்துள்ளது.

# தென் கிழக்காசியாவில் சீன இப்போது குறுக்கிடாது

## டீன் ரஸ்க் நம்பிக்கை

நியுயோர்க், செப். 11

தென் கிழக்காசியாவில் சீன குறுக்கிடும் சாத்தியக்கூறுகள் எதுவும் தென்படவில்லையென அமெரிக்க ராஜாங்க வெளியுறவு மந்திரி திரு. டீன் ரஸ்க் இங்கு தெரிவித்துள்ளார்.

அவர் நியுயோர்க்கில் ஒரு டெலிவிஷன் பேட்டியில் பேசுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அப்பேட்டியில் மேலும் பேசுகையில், வட வியட்னும் மீதான அமெரிக்க குண்டுவீச்சு நியாயமானதே என்று தெரிவித்தார்.

# தெருவில் தூங்கிய இரு வாலிபர்கள்

## பஸ் அடித்து மரணம்

முதுகுளத்தூர், செப். 11

முதலியார் புதுகுளத்தைச் சேர்ந்த முத்துகாளி, முனியாண்டி என்ற இரு வாலிபர்களும் சாயல்குடிக்குச் சினிமா பார்க்கப் போவதற்காக ரோட்டில் வந்து நின்றார்கள் பஸ் வரவேயில்லை. இரண்டு வாலிபர்களும் அதே இடத்தில் ரோட்டில் தூங்கிவிட்டார்கள்.

தாமதமாக வந்த பஸ் அந்த இரண்டு வாலிபர்கள் மீதும் ஏறிவிட்டு, நிற்காமல் நேரே சாயல்குடி சென்றுவிட்டதாம். சாயல்குடி பொலிஸில் டிரைவர் சரணடைந்தார்.

பஸ்ஸில் அடிபட்ட இரு வாலிபரும் மூளைசிதறி அதே இடத்தில் மரணமானுர்கள். இவ்விருவருக்கும் விவாகமாகி நான்கு வருடங்கள் ஆகின்றன.

# சீனவுடனன ஜப்பானிய உறவுகள் பரிசீலனை

## 3 ஜப்பானிய பத்திரிகையாளர் சீனவிலிருந்து நாடுகடத்தல்

டோக்கியோ, செப். 11

ஜப்பானிய மந்திரிசபையில், சீனவுடனன தொடர்புகளுக்குப் பொறுப்பான மந்திரிகள், இருநாடுகளுக்குமிடையேயான உறவுகள் பற்றிப் பரிசீலனை செய்வதற்கென இங்கு கூடுகிருர்கள்.

பீகிங்கிலுள்ள மூன்று ஜப்பானிய பத்திரிகையாளரைச் சீன நாடுகடத்த உத்தரவிட்டிருப்பதைத் தொடர்ந்தே இந்தப் பரிசீலனை நடைபெறுகிறது.

**பிரதமர் விஜயத்தின் பிரதிபலிப்பு**

ஜப்பானிய பிரதமரின் போர்மோஸா விஜயத்தின் பிரதிபலிப்பே சீனவின் இந்த நடவடிக்கையாகுமென ஊகிக்கப்படுகிறது.

ஜப்பானிய பத்திரிகையாளர்கள் மூவரில் இருவரை உடனடியாகவும், மற்றவரை இன்னும் 5 நாட்களிலும் நாட்டைவிட்டேகுமாறு சீன உத்தரவிட்டுள்ளது.

இவர்களுக்குப் பதிலாக வேறு ஜப்பானிய பத்திரிகையாளரை ஏற்றுக்கொள்ள முடியாதென்றும் சீன மறுத்துள்ளது.

## தென் அரபிய சமஷ்டி

ஏடன், செப். 11

தென் அரபிய சமஷ்டியில் மேலும் இரண்டு நகரங்கள் தேசிய விடுதலை முன்னணியின் கைகளில் விழுந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்துடன், தேசிய விடுதலை முன்னணி கைப்பற்றியுள்ள நகரங்களின் தொகை 16 ஆகும்.

**சமரசமுயற்சி**

இதற்கிடையில், தென் அரபிய சமஷ்டியிலுள்ள இரண்டு தேசிய ஸ்தாபனங்களாகிய தேசிய விடுதலை முன்னணிக்கும், புளொஸிக்குமிடையே சமரசம் ஏற்படுத்துவதில் உயர் இராணுவ அதிகாரிகள் சிலர் தொடர்ந்து முயற்சி செய்துவருகிருர்கள்.

## விேனபாஜிக்கு 72 வயது

புதுடில்லி, செப். 12

பூமிதான இயக்கத்தின் தலைவரான ஆச்சார்ய விேனபாபாவேயின் 72 வது பிறந்த தினம் இன்ருகும். அவரது சீடர்கள், இன்றைய தினத்தை சர்வோதய தினமாக நாடெங்கும் அனுஷ்டிப்பர்.

## ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தாபனம்

பிரசவில், செப். 11

ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தாபனத்தின் உச்சி மாநாடு இன்று கான்ஷாஷாவில் ஆரம்பமாகிறது.

இம் மாநாட்டில் தான்ஸானியா, கினி, செனிகல் ஆகிய மூன்று நாடுகளும் கலந்துகொள்ளவில்லை.

# இந்தியாவில் தொடர்ந்து வெள்ளம் ஏற்படுத்தும் கடுமையான சேதம்



பிரிட்டிஷ் பிரதமர்

## இந்தியாவுக்கு விஜயம்

லண்டன், செப். 11

பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஹரோல்ட் வில்சன், இந்த ஆண்டு இறுதியில் இந்தியாவுக்கு விஜயம் செய்யலாம்.

இந்திய துணைப் பிரதமர் திரு. தேசாய் பிரிட்டிஷ் பிரதமர் திரு. வில்சனைச் சந்தித்தபோது, 1964 டிசெம்பரில் மறைந்த இந்தியப் பிரதமர் திரு. லால்பகதூர் சாஸ்திரி நேரில் விடுத்திருந்த அழைப்பை நினைவுபடுத்தினுர்.

இந்த ஆண்டு இறுதியில் அல்லது அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் திரு. வில்சன் இந்தியாவுக்கு விஜயம் செய்ய, சில திகதிகள் பரிசீலனை செய்யப்படுகின்றன என்பதை திரு. தேசாய் ஊர்ஜிதம் செய்தார்.

## கேரளத்தில் 'பந்த்'

திருவனந்தபுரம், செப். 11

கேரள ஐக்கிய முன்னணியைச்சேர்ந்த கட்சிகள் ஆதரவில் நடைபெறும் 'பந்த்' கிளர்ச்சி இன்று கேரளாவில் நடைபெறுகிறது.

'பந்த்' கிளர்ச்சியை அமைதியான முறையில் அனுஷ்டிக்குமாறு ஐக்கிய முன்னணி, கேரள மக்களைக்கேட்டுக்கொண்டுள்ளது.

இன்றைய தினம் எல்லா அரசாங்க, கூட்டுத்தாபன ஊழியர்களுக்கும் விடுமுறை தினமாக அரசாங்கத்தால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இந்திய மத்திய அரசாங்கம், கேரளத்துக்கு உணவு அளிப்பதில், தனது உறுதிமொழிகளை நிறைவேற்றத் தவறிவிட்டதை எதிர்த்தே இக்கிளர்ச்சி ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

இக்கிளர்ச்சியை, கேரள காங்கிரஸ் கட்சி எதிர்த்துள்ளது.

## நாகலாந்தில் ஆங்கிலம் நீடிக்கும்

நாகலாந்து, செப், 11

ஆங்கிலத்தையே தொடர்ந்து உத்தியோக மொழியாக வைத்துக்கொள்வது என நாகலாந்து முடிவுசெய்துள்ளது.

இந்தியாவிலேயே இவ்விதம் முடிவு செய்துள்ள முதலாவது ராஜ்யம் நாகலாந்தேயாகும்.

## ஈமனிலிருந்து ஐ. அ கு. துருப்புகள் வாபஸ்

கெயிரோ, செப். 11

கார்டூமில் அண்மையில் ஐக்கியஅரபுக் குடியரசுக்கும் சவுதி அரேபியாவுக்குமிடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம், ஐ. அ. கு., ஈமனிலுள்ள தனது துருப்புகளை வாபஸ் பெறத்தொடங்கியுள்ளது.

ஐ. அ. கு. துருப்புகளைக் கொண்ட இராணுவலொறிகள் ஈமனிலிருந்து [illegible] ஆரம்பித்துள்ளன.

## வீடுகள், வயல்கள் நாசம்

### நானக்சாகர் அணை உடைப்பில் 50 பேருக்கு மேல் மரணம்

புதுடில்லி, செப். 11

இந்தியாவில், கங்கை ஆறு சில இடங்களில் தணிய ஆரம்பித்துள்ள போதும், சில இடங்களில் அபாய நீர் மட்டத்தைத் தாண்டியுள்ளது.

உத்தரப் பிரதேசத்திலும் பலியா மாவட்டத்திலும், பீஹாரில் பட்ன, ஸஹபாத் மாவட்டங்களிலும் கங்கை பலத்த சேதத்தை உண்டாக்கிவருகிறது.

**கல்லூரிகள் மூடப்பட்டன**

பலியாமாவட்டத்தில், பல மக்கள் தங்க இடமின்றித் தவிக்கிருர்கள். அவர்களுக்கு இடவசதியளிக்குமுகமாக அம்மாவட்டத்தில் உள்ள எல்லாப் பள்ளிக்கூடங்களும் கல்லூரிகளும் மூடப்பட்டுள்ளன.

ஆயிரத்துக்கு மதிகமான கிராமங்கள் நீரில் மூழ்கப்பட்டுள்ளன. 2,000 வீடுகள் அழிக்கப்பட்டோ அல்லது சேதப்படுத்தப்பட்டோ இருக்கின்றன. மொத்தம் 7 லட்சம் மக்கள் வெள்ளத்தினல் பாதிக்கப்பட்டுள்ளனர்.

**பட்னவில்**

பட்னவில் 75,000 ஏக்கர் விளைச்சல் நிலம் நீரில் அழிந்துவிட்டது. 400 கிராமங்கள், தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளன. பத்து நிவாரண உத்தியோகத்தர்களுடன் சென்ற ஒரு மோட்டார் படகு காணுமற்போய்விட்டது.

**வெள்ளி சம்பவத்தில் 50 பேர் மரணம்**

இதற்கிடையில், கடந்த வெள்ளியன்று, உத்தரப்பிரதேசத்தில் நானக்சாகர் அணையில் ஏற்பட்ட உடைப்பின் விளைவாக 50 பேர் உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனல் உத்தியோக பூர்வமற்ற செய்திகள், இறந்தவர்களின் எண்ணிக்கை நூற்றுக்குமதிகமாகும் எனத் தெரிவிக்கின்றன. பாரத்பூர் மாவட்டத்தில், உணவுத் தான்யங்களுக்கு ஏற்பட்டுள்ள சேதம், ஐந்து கோடி ரூபாயாகக் கணிக்கப்பட்டுள்ளது.

# தேசாய் லண்டனிலிருந்து வாஷிங்டன் வந்து சேர்ந்தார்

வாஷிங்டன், செப். 11

இந்தியத் துணைப் பிரதமர் திரு. தேசாய் லண்டனிலிருந்து நேற்று வாஷிங்டன் வந்து சேர்ந்தார்.

அவர் வாஷிங்டனில், அமெரிக்க ஜனதிபதி திரு. ஜோன்சனையும், மற்றும் தலைவர்களையும் சந்தித்துப் பேசுவார்.

**பொதுப் பிரச்னைகள்**

விமான நிலையத்தில் வைத்துப் பத்திரிகையாளருடன் பேசுகையில், பொதுவான பொருளாதார அரசியல் பிரச்னைகளையிட்டு தாம் அமெரிக்கத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடாத்துவாரென அவர் தெரிவித்தார்.

இந்தியாவின் உணவு நிலைமை இப்போது ஓரளவு சீரடைந்து வருவதாகவும் திரு. தேசாய் கூறினுர்.

# காண்டுங்கில்மா எதிர்ப்பாளர் உடன் சுட்டுக்கொலை

## மாஸ்கோ ரேடியோ தகவல்

மாஸ்கோ, செப். 11

சீனவில், மா சே துங் எதிர்ப்பாளர்கள் சுட்டுக்கொல்லப்படுவதாக மாஸ்கோ ரேடியோ அறிவித்துள்ளது.

மா ஆதரவாளர்களுக்கும் எதிர்ப்பாளர்களுக்குமிடையே நடைபெறும் போராட்டத்தில் கேந்திரஸ்தானமாக இப்போது விளங்கும் காண்டுங் மாகாணத்தில், மா எதிர்ப்பாளர் விசாரணையின்றிச் சுட்டுக்கொலைசெய்யப்படுகிருர்கள்ளன மாஸ்கோ ரேடியோ கூறியுள்ளது.

**கைதிகள் தப்பினர்**

காண்டுங் மாகாண மக்களை அங்கு சென்றுள்ள இராணுவத் துருப்புகள் நிராயுதபாணிகளாக்கிவிட்டுள்ளன.

ஒரு கைதி முகாமிலிருந்து தப்பியோடிய நூற்றுக்கணக்கான கைதிகள், ரயில்வே நிலையமொன்றைத் தாக்கியதாகவும் மாஸ்கோ ரேடியோ மேலும் தெரிவித்துள்ளது.

## அமெரிக்க விண்கலம் சந்திரனில் இறங்கியது

வாஷிங்டன், செப். 11

தாவரங்களும், விலங்குகளும் விண்வெளியில் உயிர் வாழலாம் என அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளார்கள்.

இதற்கிடையில்' அமெரிக்கா விண்வெளிக்கலமான சேர்வெயர்-5, சந்திரனில் மெதுவாகச் சென்று இறங்கியுள்ளது. சந்திரனின் நிலப்பிரதேசத்தைப் பரிசீலனை செய்யும் முயற்சியில் சேர்வெயர்-5 ஈடுபடும்.

## பிரிட்டனுடன் தொடர்பு

### ஜிப்ரால்டர் முடிவு

ஜிப்ரால்டர், செப். 11

ஜிப்ரால்டரில் நடந்த பொதுஜன வாக்கெடுப்பில், பிரிட்டனுடனுள்ள தொடர்புகளை வைத்துக்கொள்வதென ஜிப்ரால்டர் மக்களில் மிகப் பெரும்பான்மையினர் வாக்களித்துள்ளனர்.

இப்பொது ஜன வாக்கெடுப்பை. ஸ்பெயினின் எதிர்ப்புக்கிடையே, பிரிட்டன் முன்னின்று நடாத்தியது.

'பொதுஜன வாக்கெடுப்பு ஒரு வெறும் சாட்டாகும்' என ஸ்பெயின் வர்ணித்துள்ளது.

## ஏமாற்றியதாக பட்டதாரி கைது

கோவை, செப். 11

பி. ஆர். கிருஷ்ணன் என்ற ஒரு எம். எஸ். ஸி. பட்டதாரியைப் பொலிசார் ஏமாற்றிப் பணம் பெற்ற குற்றத்துக்காகக் கைது

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்தில்

# 3 கடைகள், 4 வீடுகளில் உடைத்து திருட்டு

யாழ்ப்பாணம், செவ்.

கடந்த ஒரு வாரத்தில் யாழ்ப்பாணத்தில் மூன்று கடைகளிலும் நான்கு வீடுகளிலும் வீடு பிரிக்கப்பட்டு களவு நடைபெற்றதாகப் பொலிசாருக்குத் தெரிவிக்கப் பட்டுள்ளது. இது சம்பந்தமாக இன்னும் எவரும் கைது செய்யப்படவில்லை.

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியிலுள்ள இரும்புக் கடையொன்றில் நேற்றுமுன்தினம் சுமார் 1300 ரூபா பெறுமதியான பொருட்கள் ஓடு பிரித்துக் களவாடப்பட்டதாக பொலிசில் புகார் செய்யப்பட்டதைத் தொடர்ந்து கடையிலுள்ள கைவிரல் அடையாளங்கள் பொலிசாரால் பதிவு செய்யப்பட்டன. சகல களவுகளையும் திட்டமிட்ட ஒரு கோஷ்டியே செய்துள்ளதாக பொலிசாருக்குத் தெரிய வந்துள்து.

இது சம்பந்தமாக குற்றத்தடுப்புப்பகுதி பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. மென்டிஸ் புலன் விசாரணை செய்து வருகின்றார். [ந-நி]

## தாலிக்கொடி மோசடி வழக்கு

காங்கேசன்துறை, திங்கள்

உரும்பராயைச் சேர்ந்த தில்லையம்பலம் நல்லம்மா என்பவரின் தாலிக்கொடியை மோசடி செய்ததாக அதே இடத்தைச்சேர்ந்த அன்ரன் பீரிஸ் என்பவர் மீது சுன்னாகம் பொலிசாரால் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு, மல்லாகம் மாஜிஸ்டிரேட் திரு. டி. எஸ். நிற்சிங்கா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணையின்போது, தில்லையம்பலம் நல்லம்மா என்பவரின் தாலிக்கொடியை யாழ்ப்பாணம் கன்னாதிட்டியைச் சேர்ந்தஒரு நகைவியாபாரியிடம் எதிரி 650 ரூபாவுக்கு விற்றதாகத் தெரியவந்தது. சுன்னாகம் பொலிசார் நகைவியாபாரியிடமிருந்துதாலிக்கொடியை நல்லம்மாவுக்கு மீட்டுக்கொடுத்ததும்விசாரணையின்போது தெரியவந்தது.

விசாரணையின்போட எதிரி முன்பும் ஒருமுறை குற்றப்பட்டது நீதிபதிக்குத் தெரிவிக்கப்பட்டது.

குற்றம் நிரூபிக்கப்பட்டதைத் தொடர்ந்து நீதிபதி எதிரியை 2 வருட நன்னடத்தைப்பிணையில் செல்லுமாறு உத்தரவிட்டு நகைவியாபாரியின் 650 ரூபாவையும் மாதா மாதம் 30 ரூபா விதம் கோர்ட்டு மூலம் கட்டுமாறு தீர்ப்பளித்தார்.

## காயப்படுத்தியவருக்கு அபராதம்

காங்கேசன்துறை, திங்கள்

வளலாயைச் சேர்ந்த இராஜரத்தினம், கந்தசாமி ஆகிய இருவரும் அதே ஊரைச் சேர்ந்த வேலுப்பிள்ளை என்பவரை தள்ளிக் காயப்படுத்தியதாகக் காங்கேசன்துறைப் பொலிஸாரால்குற்றஞ்சாட்டித்தொடரப்பட்ட வழக்கு மல்லாகம் மாஜிஸ்டிரேட் திரு டி. எஸ். நிற்சிங்கா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

தீர்ப்பு வழங்குகையில் வழக்காளி தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் முதலாம் எதிரி முன்பும் ஒரு வழக்கில் குற்றப்பட்டதை எடுத்துக்காட்டினார்.

எதிரிகள் இருவருக்கும் தலா 50 ரூபா அபராதம் அல்லது 4 வாரம் சிறை விதித்து அத்துடன் கோர்டு கலையும்வரை மறியல் அனுபவிக்குமாறு மாஜிஸ்டிரேட் உத்தரவிட்டார். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. அ. குமரகுரு ஆஜரானார்.

## சைப்பிரஸ்பிரச்னை

சைப்பிரஸ், செப். 11

சைப்பிரஸ் பிரச்னை பற்றி ஒரு சமரச முடிவுக்கு வருவதென கிரீசும், துருக்கியும் தீர்மானித்துள்ளன.

இரு நாடுகளுக்குமிடையேயான சிநேகபூர்வமான உறவுகள், சைப்பிரஸ் பிரச்னையின் நியாயமான தீர்விலேயே தங்கியிருப்பதாக இரு நாட்டுப்பிரதமர்களும் ஒத்துக்கொண்டுள்ளனர்.

## பருத்தித்துறை கிளையின் தீர்மானம்

வல்வெட்டித்துறை, திங்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வாலிப முன்னணி தலைவரும் மட்டக்களப்பு முதலாவது எம். பி. யும், மட்டக்களப்பு நகரபிதாவுமான திரு. செ. இராசதுரைக்கு பருத்தித்துறை கடற்கரை மைதானத்தில் ஒரு பொது வர

வேற்பு அளிக்கப்படவிருக்கிறது.

இப்போது வரவேற்புக்கான ஆயத்தங்களை பருத்தித்துறை தமிழரசுக் கிளை ஒழுங்கு செய்துவருகிறது.

# பலமைல் தூரம் சென்று பஸ்ஸை பிடிக்கிறார்கள்

## கரணவாய் மக்களின் கஷ்டம்

உடுப்பிட்டி, திங்கள்

"கரணவாய் தெற்கு, மண்டான், சோளங்கன், கல்லுவம் ஆகிய பகுதிகளிலுள்ள பொதுமக்களும், விவசாயிகளும் மாணவர்களும் பல காலமாகப் பஸ் போக்குவரத்து வசதியில்லாது பெரும் கஷ்டமடைந்துவருகின்றனர். மண்டான் குடியேற்றத்திட்டத்தில் வசிப்பவர்கள் பலமைல் தூரம் நடந்துசென்று புருப்பொறுக்கி, வல்லை ஆகிய இடங்களிலேயே பஸ்ஸைப் பிடிக்க வேண்டியுள்ளது. இதனால் விவசாயிகளே பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இ. போ. ச. அதிகாரிகள் இப்பகுதி மக்களின் குறைகளை ஆராய்ந்து தீர்க்க முயலவேண்டும். புருப்பொறுக்கிச் சந்தியிலிருந்து கல்லுவம் சந்திவரை ஒரு குறுகிய சேவை பஸ் வண்டியைப் போக்குவரத்துக்கு விட்டால் நாம்நன்மையடைவதோடு, இ. போ. ச. வுக்கும் அதிக வருமானம் கிடைக்கும். இவ்வாறு கோரும் மகஜரொன்றைக் கரணவாய்ப் பொதுமக்கள் இ. போ. ச. உயர்அதிகாரிக்கு அனுப்பிவைத்துள்ளனர்.

"பருத்தித்துறையிலிருந்து நெல்லியடி ஊடாக யாழ்ப்பாணம் செல்லும் பஸ் வண்டிகளில் ஒன்றையாவது புருப்பொறுக்கிச் சந்தியிலிருந்து அந்திரான் வீதியில் சோளங்கன், கல்லுவம், மண்டான், வல்லை ஆகிய இடங்களுக்கூடாகச் சேவையிலீடுத்தினாலும் இ. போ. சவுக்கு வழக்கத்தைவிட அதிகலாபமே கிடைக்கும்" என்றும் அம்மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இம்மகஜர் சம்பந்தமாக உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரத்திடமும் பொதுமக்கள் தெரிவித்துத் தமது குறைகளைப் போக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளதாக அறியப்படுகிறது.

## புதிய நிர்வாகிகள்

சுழிபுரம், திங்கள்

பண்ணாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க நடப்பு வருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப் பட்டார்ன.

தலைவர் திரு. ச. சம்பந்தமூர்த்தி, உபதலைவர் திரு. செ. ஸ்ரீனிவாசகன், காரியதரிசி இ. ஆறுமுகம் நிர்வாகசபையில் காலியான இடத்துக்கு பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர். திருவாளர்கள் ப. மயில்வாகனம், இ. சிவப்பிரகாசம், எஸ். திருநாவுக்கரசு.

சுழிபுரம், திங்கள்

மூளாய் வீதி செம்பாட்டம் தோட்டம் சன சமூக நிலைய புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்:-

தலைவர்: ஆ. சண்முகநாதன், உபதலைவர்: மு. சபாபதி, காரியதரிசி: செல்வன் அ. இராசேந்திரம், உபகாரியதரிசி: வ. மார்க்கண்டு, தனாதிகாரி: க. இராசையா, உபதனாதிகாரி: க. பாலசிங்கம், நிர்வாகசபை உறுப்பினர். திருவாளர்கள்: க. இராசு, சி. மார்க்கண்டு, க. சந்திரசேகரம், க. சேனாதிராசா.


இளம் பற்களை உரமாக வளரச் செய்யவும்






உறுதியான ஆரோக்கிய ஈறுகளுக்கும் உரமான வெண்ணிறப் பற்களுக்கும்

என்றும் பாவியுங்கள்

போர்ஹான்ஸ்

பற்பசை



புகழ்பெற்ற பல் வைத்தியர் ஒருவரின் தனித் தயாரிப்பு முறைக்கு தயாரிக்கப்பட்டது. இதில் ஈறுகளை காக்கும் விசேட மருந்துகள் சேர்த்துள்ளது.

பெரும்பாலான பற்கள் ஈறு வியாதிகளினால் இழக்கப்படுகின்றன

அரைவாசிக்கு மேற்பட்ட சிறுவர்களும் கிட்டத்தட்ட எல்லா இளைஞர்களும் ஈறு அழுகல் காரணமாக தமது பற்களை இழக்கின்றனர் என உலகச் சுகாதார நிபுணர்கள் ஒத்துக்கொள்ளுகின்றனர். பெரும்பாலான பற்கள் அழுகியல்ல ஆனால் இவை ஈறு வியாதியினாலேயே இழக்கப்படுகின்றன என இவர்கள் கூறுகின்றனர்.

உறுதியான ஆரோக்கியமுள்ள ஈறுகளிலிருந்தே சிறுவர்களுக்கு உரமான வெண்ணிறப் பற்கள் வளரும். தினமும் போர்ஹான்ஸ் கொண்டு ஈறுகளைத் தேய்த்து பல் துலக்குவதால் ஈறுகள் உரமாகவும் உறுதியாகவும் வளரும். அத்தோடு, பற்களும் சுத்தமாயும் வெண்மையாயும் இருக்கும்.

இளமையில் நன்முறையில் கவனிக்காது விட்டபடியால்தான் பெரும்பாலான இளைஞர்கள் ஈறுவியாதிகளினால் துன்பப்படுகின்றனர். இதற்கு தினமும் போர்ஹான்ஸ் பற்பசை கொண்டு பல்துலக்குதல் அவசியம். இதனால் அவர்களது ஈறுகள் உறுதியாவதோடு பற்களும் வெண்மையாகவும் சுத்தமாகவும் இருக்கும்.

ஒரு பல்வைத்தியரின் குறிப்புக்குத் தயாரிக்கப்பட்டது போர்ஹான்ஸ்

புகழ் பெற்ற பல் வைத்தியரான டாக்டர் ஜே. போர்ஹான்ஸ் டி. டி. எஸ். என்பவரின் தயாரிப்பு முறைக்கு ஈறுகளை பாதுகாக்கவல்ல விசேட மருந்துகளை கலந்து தயாரிக்கப்பட்டது.

பொங்கும் நுரையினால் பற்களை உரமாயும் வெண்மையாயுமோ, ஈறுகளை உறுதியாயும் ஆரோக்கியமாயுமோ வைத்திருக்க முடியாது. ஈறுகளைத் தேய்த்து பற்களைச் சுத்தஞ் செய்ய போர்ஹான்ஸ் போன்ற ஒரு விசேட தயாரிப்பு முறை அவசியம்.

ஆரோக்கியமான ஈறுகளிலிருந்தே உரமான பற்கள் வளரும், ஈறுகள் எவ்வளவு காலத்திற்கு உறுதியாயும் ஆரோக்கியமாயும் இருக்கின்றனவோ அவ்வளவு காலத்திற்கு இவை உரமாயும் இருக்கும். போர்ஹான்ஸ் பல்லைப் பாதுகாத்து ஆரோக்கியமான [illegible]

உரம் பற்களை என்றும் இளமையுடன் காக்கவும்






உறுதியான ஆரோக்கிய ஈறுகளுக்கும் உரமான வெண்ணிறப் பற்களுக்கும்

என்றும் பாவியுங்கள்

போர்ஹான்ஸ்

பற்பசை



புகழ்பெற்ற பல் வைத்தியர் ஒருவரின் தனித் தயாரிப்பு முறைக்கு தயாரிக்கப்பட்டது. இதில் ஈறுகளை காக்கும் விசேட மருந்துகள் சேர்த்துள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணப் பாடசாலைகள் விளையாட்டுச்சங்க போட்டிகள்

புன்னாலைக்கட்டுவன், திங்கள்

யாழ்ப்பாண பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் ஆண்டு தோறும் நடாத்தும் உதை பந்தாட்டச்சுற்றுப் போட்டி இம்மாதம் 24-ந் திகதி யாழ். விளையாட்டரங்கில் ஆரம்பமாகும். அன்றைய தினம் 'ஏ' பிரிவைச்சேர்ந்த கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும், மானிப்பாய் இந்துக் கல்லூரிக்குமிடையில் முதல் போட்டி நடைபெறும். அதே தினம் 'பி' பிரிவைச் சேர்ந்த வைத்தீஸ்வரா —சிதம்பராக்கல்லூரிகளுக்கிடையிலும் போட்டி நிகழும். இச்சுற்றுப் போட்டியில பங்குபற்றும் கல்லூரிகள் வருமாறு:-

'ஏ' பிரிவு—பிரிவு 1

யூனியன், பரமேஸ்வரா, கொக்குவில் இந்து, மானிப்பாய் இந்து.

பிரிவு 2

யாழ் இந்து. யாழ். மத்தி வசாவிளான், மகாஜனு.

'பி' பிரிவு—பிரிவு 1

நடேஸ்வரா, டிறிபேக், கோப்பாய் கிறிஸ்தியன், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன்.

பிரிவு 2

கனகரத்தினம் மகாவித்தியாலயம், சிதம்பரா, நெல்லியடி, வைத்தீஸ்வரா.

'ஸி' பிரிவு 1

மகாஜனு டிறிபேக், சாவகச்சேரி இந்து, யாழ். இந்து யாழ். மத்தி.

பிரிவு 2

அருணோதயா, உடுப்பிட்டி. உரும்பராய் இந்து, மானிப்பாய் இந்து.

---

## கரபந்தாட்ட பயிற்சி

வல்வெட்டித்துறை, திங்

யாழ்ப்பாணத் தொகுதி கரபந்தாட்டக் கழகத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட கரபந்தாட்டப் பயிற்சி வகுப்பு வல்வை சிதம்பரக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றுவருகிறது. இப்பயிற்சி வகுப்பை வல்வை பட்டணசபைத் தலைவர் திரு. எம். வி. இரத்தினவடிவேலு ஆரம்பித்து வைத்தார். இப்பயிற்சி வகுப்பில் யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, வவனியா ஆகிய இடங்களிலிருந்து முப்பது பயிற்சியாளர்கள் கலந்துகொண்டுள்ளனர். இப்பயிற்சி வகுப்புக்கு முன்னாள் உதவிப் பொலிஸ் சுப்ரிண்டண்ட் திரு. வி.கே. ஆறுமுகம், திரு. ஆர். அருளையா, திரு. கே. கார்த்திகேசு ஆகியோர் பொறுப்பாகக் கடமையாற்றுகிறார்கள். பயிற்சி வீரர்களின் தங்குவசதி, போசனம் என்பவற்றை திரு. இரத்தினவடிவேலு கவனித்து வருகிறார்.


# இப்பொழுது நடைபெறுகிறது

கெபிடல் [கொட்டாஞ்சேனை] — பிளாஸா [வெள்ளவத்தை] — விஜயா [மட்டுநகர்]

விஜிதா [ஹட்டன்] — மொடர்ன் [பதுளை] — ஸ்ரீகிருஷ்ணு [திருமலை]

வெலிங்டன் [யாழ்ப்பாணம்]

புதுமையான கதை! உணர்ச்சிமிக்க வசனம்!

காதிற்கினிய பாடல்கள்!

முழுவதும் ஒரு ஹாஸ்ய விருந்து!

ஜெய்சங்கர், ரவிச்சந்திரன், நாகேஷ், விஜயலட்சுமி. ரத்னு, மாதவி

நடித்த



# நாம் மூவர்

டைரக்ஷன்: ஜம்பு — பாடல்கள்: வாலி — இசை: என்.எம்.எஸ்.

2-வது மாதம்

இங்ஸ்லி [கொழும்பு] — வெம்பிளி [கண்டி]

மற்றும் 4 திரைகளில்

எம். ஜி. ஆர். — சரோஜாதேவி நடித்த

# அன்பே வா


மயிலிட்டி

# கென்னடி நூலக விளையாட்டுப்போட்டி முடிவுகள்

காங்கேசன்துறை, திங்கள்

மயிலிட்டி கென்னடி நூலக முதலாவது விளையாட்டுப்போட்டி மயிலிட்டி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. விளையாட்டுப் போட்டிக்கு வலி-வடக்கு வைத்திய அத்தியட்சகர் திரு. ஏ. பொன்னுச்சாமி பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். விளையாட்டுப்போட்டியில் வெற்றி பெற்றோருக்கு திரு. ஏ. பொன்னுச்சாமி பரிசில்களை வழங்கினர்.

போட்டிகளும் வெற்றி பெற்றோரின் விபரங்களும் வருமாறு:

இயந்திரப் படகுப் போட்டி: சேனாதிராசா, கணபதிப்பிள்ளை, ஏ. பேதுருப்பிள்ளை.

கட்டுமரப்போட்டி: வி. சிவலிங்கம், மு. குட்டியன், கிட்ணபிள்ளை.

நீச்சல்போட்டி: ந. தேவலிங்கம், ம. யோசெப், இரத்தினஆனந்தம்.

4 X 440 யார் அஞ்சல் ஓட்டம்: கண்ணகி படிப்பகம், பழந்துறை வாலிபர் முன்னேற்றக்கழகம்.

4 X 110 யார் அஞ்சல் ஓட்டம்: கண்ணகிப் படிப்பகம், பழந்துறை வாலிபர் முன்னேற்றக்கழகம்.

தடைஓட்டம்: வி. சிவயோகநாதன், கண்ணகிப் படிப்பகம், எஸ். ஜெயானந்தன், வி. பரமநாதன், கண்ணகிப் படிப்பகம்.

ஒரு மைல் ஓட்டம்: எம். சோமேஸ்வரன், கண்ணகிப் படிப்பகம், வி. செல்வராஜா, எம். ஜி. ஆர். மன்றம், என். கருணாநிதி, கண்ணகிப்படிப்பகம்

சைக்கிள் ஓட்டப் போட்டி: எம். வைத்தீஸ்வரன், எஸ். சுந்தரலிங்கம், பி. யோகநாதன்.

தலையணைச் சண்டை: என். தேவலிங்கம், எம். யோசப்.

குண்டெறிதல்: ந. தேவலிங்கம், ச. மரியாம்பிள்ளை, க. தங்கலிங்கம்.

கயிறிழுத்தல்: வி. சுந்தரலிங்கம் கோஷ்டி, [6-ம் வட்டாரம்]

சங்கீதக் கதிரைப் போட்டி: ஞா. சிவப்பிரகாசம், (உத்தியோகஸ்தர்).

உயரம்பாய்தல்: சி. அன்ரன், நா. தேவலிங்கம், ரி. மரியாம்பிள்ளை.

100 யார் ஓட்டம்: ந. தேவலிங்கம், க. தங்கலிங்கம், செ. மரிசலீன்.

440 யார் ஓட்டம்: ந. தேவலிங்கம், இ. அன்ரன்.

நீளம்பாய்தல்: செ. அமிர்தலிங்கம், சி. நித்தியானந்தம், அ. சிறீபால சுப்பிரமணியம்.

220 யார் ஓட்டம்: செ. அமிர்தலிங்கம், அ சிறீபால சுப்பிரமணியம், க. சுபாஸ் ரட்ணஜோதி.

110 யார் ஓட்டம்: செ. அமிர்தலிங்கம், து. சண்முகநாதன், அ. சிறீபால சுப்பிரம்ணியம்.

முட்டி உடைத்தல்: பொ. சிவம்.

100 யார் ஓட்டம்: கீழ்ப் பிரிவு- (ஆண்கள்) ஞா. மதுரநாயகம், சி. ஜெயானந்தம், த. சங்கரலிங்கம்.

பலூன் உடைத்தல்: தோ. வில்பிறட், அ. அந்தோனிப்பிள்ளை, நா. மதுரநாயகம்.

வடை சாப்பிடல்: செ. அன்ரன், செ. ஆனந்தராசா, சி. ஜெயானந்தன்.

[6-ம் பக்கம் பார்க்க]


## ராஜா RAJAH

யாழ்ப்பாணம் JAFFNA.

Daily at 4-45, 7-00, 9-45 p. m.

Pre-Poya & Poya 10-30 a. m.

OPERATION WHITE SHARK

with

Franco Polesello

as Secret agent A. D. 3

Cinema Scope - Colrno

## மனோஹரா

[யாழ்ப்பாணம்]

தினசரி, 6-30, 9-30

போயாதினங்களில்

3 காட்சிகள்

முத்துராமன், கலயாணகுமார், தங்கவேலு, மாலினி, வசந்தி முதலியோர் நடித்த

அழகு நிலா

## நியூ காலிங்கன்

[இணுவில்]

தினசரி 6-30, 9-30 மணி

விடுமுறைதினங்களில் 2-30

எம். ஜி. ஆர்.

கே. ஆர். விஜயா

நடித்த

தொழிலாளி

## REGAL JAFFNA

Time: 4-30 7-00 p. m.

9-45 p. m.

Audid Murphy

Ben Cooper

in

Gun Fight at

Comanche Creek


## தேவை

சேல்ஸ்மென்

சுவெப்ஸ் குளிர்பானங்கள், தேயிலை ஆகியவை சைக்கிளில் சேல்ஸ் செய்வதற்கு இளைஞர்கள் தேவை. நேரில் சந்திக்கவும், நந்தி இன்டஸ்றீஸ், 20, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். 2353

## திருமணம்

நிகழும் பிலவங்க வருஷம் ஆவணி மாதம் 29-ந் திகதி [14-9-1967] வியாழக்கிழமை காலை 10 மணி — 10-48 மணிவரையுள்ள சுபமுகூர்த்தத்தில் எமது திருநிறைசெல்வி விக்னேஸ்வரிக்கும் திருநிறை செல்வன் லக்ஷ்மணனுக்கும் நல்லூர் கந்தசுவாமிகோவிலில் நடைபெறும் திருமணத்திற்குஉறவினர் நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். வை. சிவசுப்பிரமணியம் தம்பதிகள், 43, மின்சாரநிலையவீதி, யாழ்ப்பாணம். 2541

### ஏமாற்றியதாக...

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

செய்துள்ளார்கள். இவரது வயது 34.

பட்டதாரி கிருஷ்ணன், 'டாக்டார் சிவராம்' என்று போலிப் பெயர் வைத்துக்கொண்டு, கோவையைச் சேர்ந்த அய்யாசாமி செட்டியார் என்ற கைத்தறித் துணி வியாபாரியை ரூ. 7475க்கு ஏமாற்றியதாகக் கூறப்படுகிறது.

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

காணி

சுன்னாகம் பொலிஸ்நிலையத்திற்குமுன் 4 1/2 பரப்புக் காணி விற்பனைக்குஇருக்கிறது. தேவையானோர் கீழ்க்காணும் விலாசத்திற்கு தொடர்புகொள்ளவும். சி. கனகலிங்கம், 30/7 தாமரக்கேணி ரோட், மட்டக்களப்பு. 2356

கடை

யாழ்ப்பாண காங்கேசன்துறை வீதியில், பெரிய கடைக்கு அருகாமையில் ஒரு கடை விற்பனைக்குண்டு. விபரங்கட்கு:- ம. கனகரெத்தினம், 117 அரசடிவீதி, யாழ்ப்பாணம். 2540

காணி

நுணுவில் மருதடி விநாகத் திப்பிள்ளையார் கோவில் தெற்குவீதியில் "கொத்தன் வளவு" என்ற பெயருடைய 22 பரப்பு காணிவிற்பனைக்கு உண்டு. விபரங்கட்கு சு. வேணுகுசாம்பாள், சிவன் கோவில் தெற்குவீதி, திரிமலை. 2354

செம்மறி ஆடுகள்

செம்மறி ஆடுகள் 40 உடனடியாக இயக்கச்சியில் விற்பனைக்குண்டு. நேரில்வரவும். 68/5, புல்லாந்த்தோட்ட ஒழுங்கை, இராசாவின் தோட்டவீதி, யாழ்ப்பாணம். 2539

நாய்க்குட்டிகள்

P. B. அல்சேசன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தேவையானோர் நேரடியாக விஜயம் செய்யலாம், R. பரம்சோதி, "வசந்தம்", மானிப்பாய். 2357






## திருமண அழைப்பு

### ரமணனந்தன் — ஜெயமணி

திரு. ஏ. டபிள்யு. நடராஜா (ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி) அவர்களின் புத்திரன் செல்வன் ரமணனந்தனுக்கும் [ஏ. பவர் & கொம்பனி] திரு. எம். எஸ். கனகசூரியம் அவர்களின் புத்திரி செல்வி ஜெயமணிக்கும் நல்லூர் சிவன்கோவிலில் இம்மாதம் 14-ம் திகதி மாலை 5 மணிக்கும் 6 மணிக்குமிடையில் வரும் சுபமுகூர்த்தத்தில் திருமணம் நடைபெறவிருக்கிறது. அத்தருணம் உறவினர்களும் நண்பர்களும் சமுகந்தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டிக்கொள்கின்றோம். தனிப்பட்ட அழைப்பு அனுப்பமுடியாமைக்கு வருந்துகிறோம்.

எம். எஸ். கனகசூரியமும் பாரியாரும்

[மணமகளின் பெற்றோர்]

272, நாவலர் வீதி,

யாழ்ப்பாணம். 226

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தொகுதிதோறும் தீண்டாமை ஒழிப்புப்பிரசாரம் நடைபெறும்

## அதிபர் கூட்டிய மகாநாட்டில்

## தர்மகர்த்தாக்கள், எம். பி. க்கள் இணக்கம்

யாழ்ப்பாணம், திங்கள்

**தொகுதிகள் தோறும் தீண்டாமை ஒழிப்பிற்கு ஆதரவாக கூட்டங்கள் வைத்து மக்களுக்கு பிரச்சாரம் செய்து விளக்கிக் கூறுவதற்கு தமிழ் எம். பி. க்கள் சம்மதம் தெரிவித்துள்ளனர்.**

தீண்டாமைப் பிரச்னை சம்பந்தமாக யாழ்ப்பாணம் அரசாங்கச் செயலக மண்டபத்தில் அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா தலைமையில் நேற்று மாலை மகாநாடொன்று நடைபெற்றது.

தேநீர்க்கடைப் பிரவேசம், ஆலயப் பிரவேசம் பற்றித் தமிழ் எம். பி. க்கள் தொகுதிகள் தோறும் நடாத்தப்படும் கூட்டத்தில் விளக்கிக் கூறுவதாகத் தெரிவித்தனர்.

இம்மகாநாட்டில் தமிழரசுக்கட்சி எம். பி. க்களான திருவாளர்கள் எஸ். ஜே. வி. செல்வநாயகம், ா. எம். வி. நாகநாதன், எ. அமிர்தலிங்கம், எஸ். கதிரவேற்பிள்ளை, வி. தர்மலிங்கம், கே. துரைரத்தினம், செனட்டர் எஸ். நடராஜா ஆகியோர் கலந்துகொண்டனர்.

வட பகுதிப் பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம், உதவி அரசாங்க அதிபர் திரு. ரி. முருகேசம்பிள்ளை, ஆலய தர்மகர்த்தாக்கள், கோயில் மனேஜர்கள், காரியாதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

ஆலயப் பிரவேசம், தேநீர்க்கடை பிரவேசம் ஆகியவற்றை ஆதரித்து தொகுதிகள் தோறும் பகிரங்கக் கூட்டங்கள் வைத்து விளக்குவதன்மூலம், பொது மக்களின் மனதை மாற்ற முடியுமென்றும், அப்படி கூட்டங்கள் வைக்க பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்வரவேண்டுமெனவும் ஆலய தர்மகர்த்தாக்கள் வேண்டுகோள் விடுத்தனர். இவ்வேண்டுகோளை, மகாநாட்டில் சமுகமளித்திருந்த எம். பி. க்கள் ஏற்றுக்கொண்டனர்.

பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம் பேசும்போது, தீண்டாமை ஒழிப்பிற்கு ஆதரவாக தாங்கள் தொகுதிகள் தோறும் பொதுக் கூட்டம் வைத்து மக்களுக்கு விளக்கப்போவதாகவும், முதலாவது கூட்டம் பருத்தித்துறை கடற்கரை மைதானத்தில் இம்மாதம் 25-ம் தேதி நடைபெறுமென்றும் கூறினார்.

அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா கூறியதாவது:- கடந்த மகாநாட்டில் மூன்று வெவ்வேறு கருத்துதெரிவிக்கப்பட்டது. ஒரு சாரார் ஆலயப் பிரவேசத்தை முற்றாக எதிர்த்தனர். மற்றொருசாரார் இதைப்பற்றி ஆலோசிப்பதாகக் கூறினர். இன்னொரு சாரார்ன் இதனை முழுமனதுடன் வரவேற்றனர். யாழ்ப்பாண மாவட்டததில் மார்ச்மாதத்தின் முன்பு 21 ஆலயங்கள் திறந்து விடப்பட்டன. மார்ச்மாதத்தின் பின் தீவுப்பகுதியில் 1 கோயிலும், யாழ்ப்பாணத்தில் 3 கோயிலும் திறந்து விடப்பட்டன. அச்சுவேலி பிள்ளையார்கோயிலை திறந்து விடுவது பற்றி நவம்பர் 15-ம் தேதி முடிவு தெரிவிக்கப்படும். யாழ்ப்பாணத்தில் சாதிப்பாகுபாடு சம்பந்தமாக 5 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அன்பு வழியில், சமாதான முறையில் தீண்டாமைபிரச்னையை தீர்க்க எல்லாரும் முன்வர வேண்டும்.

ஆலய தர்மகர்த்தாக்கள் சார்பில் திரு. எஸ். பொன்னுத்துரை கூறியதாவது: பாராளுமன்ற உறுப்பினர்கள் தொகுதிகள் தோறும் கிராமம், கிராமமாக தீண்டாமை ஒழிப்பை ஆதரித்துப்பிரச்சாரக் கூட்டங்கள் வைத்து பொது மக்களுக்கு விளக்க வேண்டும். இதன் மூலம், பொதுமக்கள் மனதை மாற்ற முடியும். பொதுமக்கள் சம்மதம் கொடுத்தால் தர்மகர்த்தாக்களும் ஆலயங்களை திறந்துவிட பின் நிற்கமாட்டார்கள்.

வட்டுக்கோட்டை எம். பி. திரு. ஏ. அமிர்தலிங்கம் கூறியதாவது: தீண்டாமை பிரச்னையை தீர்ப்பதற்கு சில அரசியல்வாதிகள் பலாத்காரத்தை தூண்டி வருகின்றனர். இதனை நான் பலமாகக் கண்டிக்கிறேன். தீண்டாமை ஒழிப்பு நடவடிக்கைகளுக்கும், இப்பலாத்காரச் செயல்கள் பெரும் தடையாக அமையும். அரசியல் நோக்கத்துக்காக இதனைப் பயன்படுத்துவோர், இரத்தக் களரியை மக்கள் விரும்பவில்லை என்பதை உணரவேண்டும் பலாத்காரச் சம்பவங்களை எவரும் விரும்பமாட்டார்கள்.

## "இதை நீங்கள் கேள்விப்பட்டதில்லையா?'

## வட்டுக்கோட்டை எம். பி. விளக்கம்

யாழ்ப்பாணம், திங்கள்

ஆலயப்பிரவேசம் செய்ய முயன்றவர்களுக்குள் கடவுள் தண்டனை கிடைத்துள்ளதாகவும், அச்சுவேலியில் கோயிலையும், தேரையும், ஐயரையும் ஒழித்துக் கட்ட தேங்காய்க்கு உள்ளே வெடிகுண்டு வைத்துத் தயாரிக்க முயன்றவர் அந்த வெடிகுண்டுக்கே பலியாகினார் என்றும், கோயில் கதவை உதைத்த ஒருவர் பனையிலிருந்து விழுந்து காயமடைந்ததாகவும், மற்றொருவர் ரயிலில் விழுந்து மாண்டாரெனவும் கூறினார் சைவ அனுட்டான பாதுகாப்புச் சபைத் தலைவர் திரு. சிவலிங்கம்.

இச்சமயம் திடீரென எழுந்த வட்டுக்கோட்டை எம். பி. திரு. ஏ. அமிர்தலிங்கம் "நல்லூர்க் கந்தசுவாமி கோயிலைத் திறந்துவிட்ட திரு. எம். ஸ்ரீகாந்தா பதவி உயர்வுபெற்று நிரந்தரக் காரியதரிசியானார். ஆலயப் பிரவேசத்திற்கு பாடுபட்ட திரு. எம். ஸ்ரீ ஸ்கந்தராசா சுப்ரீம் கோர்ட் நீதியரசரானார். இதை நீங்கள் கேள்விப்படவில்லையா?" என்றார்.

நேற்று மாலை அரசாங்க செயலக மண்டபத்தில் நடந்த சிறுபான்மைத் தமிழர் சம்பந்தமான முடிவுகளை ஆராய்வதற்காகக் கூட்டப்பட்ட மகாநாட்டில் இது நடந்தது. [அ. நி.]

## "ஈழத்துக் கவிதைகளில் ஜீவன் இருக்கிறது"

### —அழகிரிசாமி

கொழும்பு, ஞாயிறு

'உயிருள்ள கவிதைகள் இலங்கையில் படைக்கப்படுகின்றன. பேச்சுவழக்கில் இங்கு கவிதைகள் பிறக்கின்றன'

இவ்வாறு திரு. கு. அழகிரிசாமி இன்று பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற பாரதிவிழாவில் பேசுகையில் கூறினார்.

இறக்குமதி ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்கள தமிழ் இலக்கிய மன்றத்தினரால் ஏபபாடு செய்யப்பட்ட இவ்விழாவில் பேசிய பாரதியாரின் பேர்த்தியான திருமதி விஜயபாரதி, பாரதியாரின் கவிதைகள் உணர்ச்சிகள் வாயிலாக வந்ததால் என்றும் நிலைத்து நிற்கும் என்றார். இவ்விழா திரு. த. குலஞானம் தலைமையில் நடைபெற்றது.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி [illegible] இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967 [illegible] செப்டம்பர் மாதம் 12-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## ஐயாறன்

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

கானந்தசபையாரும் வேறு பலரும் நடத்தும் சமய பாடப் பரீட்சைகளைப்பற்றியும் அதில் பல்லாயிரக் கணக்கானவர் கலந்துகொள்வதைப்பற்றியும் விளக்கினேன்.

சமயப் பிரசாரகர் பயிற்சி வகுப்பு பூர்த்தி விழாவில், கமிஷனர் முதலியார் அவர்கள் மற்றோர் முக்கிய யோசனையும் சொன்னார். பிரசாரகர்கள் சிவதீட்சை எடுக்கவேண்டுமென்றார். முப்பது பேர்களில் ஒரே ஒருவர்தான் தீட்சை எடுத்து சமயப்பிரவேசம் செய்தவராம் தீட்சை எடுத்து சமயப் பிரவேசமே செய்யாதவர்கள், செய்யும் சமயப் பிரசாரத்தால் என்ன பயன் ஏற்பட முடியும்?

மறுநாள் மதுரை ஆதீனகர்த்தர் சிவதீட்சை அளிப்பதாயும், பயிற்சி மாணவர்கள் அதைப் பெறலாமென்றும் அறிவிக்கப்பட்டது. ஆனால் மறுநாள் ஒருவர்கூட தீட்சை வாங்கவரவில்லையாம். சபை காரியதரிசிமட்டும் தீட்சை எடுத்துக் கொண்டார். இந்த பயிற்சி வகுப்பில் சேருபவர்கள் கட்டாயம் சிவதீட்சையும் சிவபூசையும் எடுக்கவேண்டுமென்று தகுதி நிபந்தனை போடவேண்டாமா? இல்லாவிட்டால், இவ்வளவு செய்தும் என்ன பயன்?

மறுநாள் ஒரு விஷயம் கேள்விப்பட்டேன். சென்னையில் பல கொட்டில்கள் தீக்கிரையாகிவந்த சமயம் அது. அங்கு கஷ்ட நிவாரண வேலை செய்ய, சமயப் பயிற்சியில் தேறிய ஒருவர் ஆர்வத்துடன் சென்றாராம். அவர் கதர் சட்டை அணிந்திருந்தார். கதர் சட்டை அணிந்தவர் காங்கிரஸ்காரராக இருக்கலாமென்று சந்தேகித்த, அங்கிருந்தவர்கள் அவரை நையப்புடைத்ததாயும் அவர் இரு பற்களையும் இழந்து ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றதாயும் அறிந்தேன்! என்ன விபரீதம்!

தெய்வீகப்பேரவைசார்பாக ஆயிரம் ரூபாய்க்கு புடவை, வேட்டிகள் வாங்கி, தீயால் வீடிழந்தவர்களுக்கு, மதுரை ஆதீனகர்த்தரின் தலைமையில் விநியோகித்தனர். சென்னை மந்திரி ஒருவர் அதற்கு சமூகமளிப்பதாக இருந்தார். அவர் என்ன பேசுவாரென்பதைக் கேட்க ஆவலுடன் சென்றேன். ஆனால் அம்மந்திரி வரமுடியவில்லைஎன்று செய்தியனுப்பிவிட்டதைக்கேட்க ஏமாற்றமாக இருந்தது. சமூகசேவை விஷயங்களிலும்இப்பேரவை ஈடுபடமுன்வந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

ஃ

பண்ணிற் பாடல்கள் பத்திசெய் வித்தகர்க்கு,
அண்ணித்தாகும் அமுதினை
ஆமாந்துட், கண்ணிப் பானைத் தமர்க்கணித் தாயதோர்,
கண்ணிற்பாவை யன்னவன் காண்மினே.

—அப்பர் சுவாமிகள்.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

## காயமடைந்தவர்....

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

விக்கப்பட்டது. அப்படி ஒருவர் அங்கு இல்லையென பதில் கிடைத்ததாம். சாவ [illegible] கண்டு யார் என்பதே தெரியவில்லையாம்.

## மாற்றம் ஏற்படவில்லை

மூதூர், திங்கள்

திருகோணமலை மாவட்டத்தில் பாடசாலைகளுக்கிடையே கூடியும், குறைந்தும் காணப்படும் ஆசிரியர் நிலையைத் தரப்படுத்தும் ஒரு மாற்றம் இரண்டாம் தவணையின் விடுமுறையில் நடக்கலாம் என இம் மாவட்ட ஆசிரியர்கள் எதிர்பார்த்தார்கள். ஆனால் கடைசி நேரத்தில் எதுவித இடமாற்றங்களும் தற்போதைக்கு செய்யப்படக் கூடாது என மேலிடத்தால் வந்த கட்டளையைத் தொடர்ந்து இது கைவிடப்பட்டதாய் அறியவருகிறது இதனால் நம்பி இருந்த அநேகர் பெரிய ஏமாற்றமடைந்ததாகத் தெரிகிறது. சில ஆசிரியர்கள் தமது வாடகைக் குடியிருப்பு இல்லங்களையும் நேரகாலத்தோடு விட்டகல நடவடிக்கையும் எடுத்திருந்தனர் என்றும், இவர்கள் இப்போது மிக்க கஷ்டத்துக்குள்ளாகியிருப்பதாகவும் தெரிகிறது.

## புதிய கல்வித்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தில் நிறுவப்படுகின்ற போதிலும் 6-ம் வகுப்பிலிருந்தே பாடசாலைகளில் விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்கள் கற்பிக்க ஆரம்பிக்கப்படுகின்றது. இந்த நிலையில் பாடசாலைகளில் 6-ம் வகுப்பே மிக முக்கியமானதொரு வகுப்பாவதோடு, மாணவர்களுக்கு அத்திபாரமாகவும் அமைகின்றது. இந்த நிலையில விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் திறமைபெற்ற ஆசிரியர்களை நியமிக்கக்கூடிய வகையில் புனரமைப்புத் திட்டம் அமைக்காதது வருந்தத்தக்கதாகும். இரண்டாம்தர பயிற்சிபெற்ற ஆசிரியர்களை அல்லது, கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் விசேஷ பயிற்சி பெற்ற ஆசிரியர்களை கனிஷ்ட பாடசாலைகளில் நியமிக்க புனரமைப்புத்திட்டம் வழிவகுக்கக்கூடியதாக திருத்தம் செய்யவேண்டும். இப்படியாக நியமிப்பதால் தான் மாணவர்கள்சிரேஷ்ட பாடசாலைகளுக்குச் சென்ற பின்னர்இப்பாடங்களைச் சுலபமாகப் படிக்கமுடியும்.

இதனை சகலபாராளுமன்ற உறுப்பினர்களும் ஆதரித்துப்பேசினார்கள். இத்திட்டத்துக்கமைய வடபகுதி பாடசாலைகளின் புனரமைப்புக்காக, வடபகுதி வித்தியாதிபதி தயாரித்த திட்டத்தை அனைவரும் பாராட்டியதோடு, தொகுதிவாரியாக பாடசாலைகள் தரமுயர்த்துதல், தரம்பிரித்தல் பற்றியும் இங்கு ஆலோசனை செய்யப்பட்டது. ந. நி.

## கென்னடி நூலக....

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

100 யார் ஓட்டம்: கீழ்ப் பிரிவு- (பெண்கள்) சி. பிபிலியா, அ. அமிர்தயோகம், சூ. சதாசூசைராணி.

ஊசி நூல் கோர்த்தல்: பொ. பஞ்சலட்சுமி, செ. ஞானபாக்கியம், அ. அமிர்தயோகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org